Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

உதயன்

சுடர் : 38
கதிர் : 146

வெள்ளிக்கிழமை 21 ஏப்ரல் 2023

சித்திரை 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# 1 டொலர் 327 ரூபா

கொழும்பு, ஏப். 21
இலங்கைமத்தியவங்கி நேற்றுவெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில், ஒரு டொலருக்கான இலங்கை ரூபாவின் பெறுதி 327.89 என்றவாறாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
யூரோவுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 361.11 என்ற வாறாகவும், ஸ்ரேலிங் பவுண் ஒன்றுக்கான ரூபாவின் பெறுமதி 409.1 என்றவாறாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக

# தாயகத்தில் நேற்று தீவிர போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
வடக்கு - கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டங்கள் நேற்றுத் தமிழர் தாயகத்தில் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. »11

முச்சந்தி முரளி



"அப்ப இனி திரும்பவும் மாஸ்குக்கு வேலை வந்திடுமோ?"

விடைத்தாள் திருத்தம் தாமதம்

## மனித உரிமை ஆணைக்குழுவில் பெற்றோர் சங்கம் முறைப்பாடு!

தீர்வில்லாவிடில் போராடவும் முடிவு

கொழும்பு, ஏப். 21
உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைப் பெற்றோர் சங்கத்தால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10 நாள்களுக்குள் தீர்வு வழங்கப்படாத பட்சத்தில் போராட்டமொன்றை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. »11

கல்வித்துறை அத்தியாவசிய சேவை:

## ஜனாதிபதியின் முடிவுக்கு சகல கட்சிகளும் ஆதரவு!



கொழும்பு, ஏப். 21
கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்யும் ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதென கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் தீர்மானத்தை »11

கல்வித்துறையை

## அத்தியாவசியச் சேவையாக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

ஜோசப் ஸ்டாலின் ஆவேசம்



கொழும்பு, ஏப். 21
கல்வித்துறையை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். »11

நாணய நிதிய உதவிகள்

## 26, 27, 28ஆம் திகதியில் நாடாளுமன்றில் விவாதம்!

கொழும்பு, ஏப். 21
சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் தொடர்பிலும், இந்த உதவிகளுக்காக நாணய நிதியம் வைத்துள்ள முன்மொழிவுகள் தொடர்பிலும், நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் விவாதம் நடத்தப்படவுள்ளது. »11

நீண்ட காலத்தின் பின்னர்

## யாழ்ப்பாணத்தில் ஒருவர் கொரோனாவால் சாவு!



யாழ்ப்பாணம், ஏப். 21
கொரோனாத் தொற்றுக்குள்ளாகி ஆபத்தான கட்டத்திலிருந்த 71 வயதான முதியவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. »11

ஆங்கில மருத்துவம் குறித்த தவறான தகவல்கள்

## அக்குபஞ்சர் மருத்துவருக்கு நீதிமன்று கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 21
ஆங்கில மருத்துவம் தொடர்பிலும் மருத்துவர்கள் தொடர்பிலும் முகநூலில் தவறான தகவல்களை வெளியிட்ட அக்குபஞ்சர் மருத்துவரொருவர் நீதிமன்றத்தில் நேற்று மன்னிப்புக் கோரியுள்ளார்.
யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அக்குபஞ்சர் மருத்துவர் என்ற பெயரில் போலியான நபரொருவர் செயற்பட்டு வருகின்றார் என்றும் இது தொடர்பில் மக்கள் அவதானமாக »11

# ஜனாதிபதியின் விருப்பப்படியே தேர்தல் தீர்மானிக்கப்படுகிறது!

பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 21
இலங்கையில் தேர்தலென்பது நகைச்சுவையான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஜனாதிபதிக்குத் தேவையான முறையிலேயே நாட்டில் தேர்தல் இடம்பெறவேண்டும் என்ற செய்தியே தற்போது எமக்கு வழங்கப்பட்டிருக்கிறது என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
பவ்ரல் அமைப்பால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தி »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க மருந்து நிபுணர்கள் பற்றாக்குறையால் சிக்கல்!

## எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் சத்திரசிகிச்சைகள் நிறுத்தம்

**கொழும்பு, ஏப்.21**



**மயக்க மருந்து நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக எம்பிலிப்பிட்டிய மாவட்டப் பொது மருத்துவமனையில் இரண்டு வாரங்களுக்கு மேலாக அனைத்து அவசர சத்திர சிகிச்சைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.**

இது தொடர்பில் நேற்றுமுன் தினம் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரத்தினபுரியில் மாத்திரமன்றி அம்பாந்தோட்டை, மாத்தளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களுக்கான பிரதான மருத்துவமனைகளில் எம்பிலிப்பிட்டிய மாவட்டப் பொது மருத்துவமனையும் ஒன்றாகும்.

தற்போது அங்கு மயக்க மருந்து நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக அனைத்துச் சத்திரசிகிச்சைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மருத்துவமனையில் சிகிச்சையளித்து வந்த மயக்க மருந்து நிபுணர்கள் இருவரும் அண்மையில் வெளிநாட்டுக்குச் சென்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டதால் மருத்துவமனையில் சத்திரசிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட மற்றும் தீவிர சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுபவர்களை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது மருத்துவமனையில் மகப்பேற்று அறுவைச் சிகிச்சை கூட மேற்கொள்ளப்படுவதில்லை என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

அதேவேளை, அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய 3 சிறுவர் மருத்துவ நிபுணர்களும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அண்மையில் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது மருத்துவமனையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டிருந்தது. (எ-இ)

# கிலோ அளவில் இனி முட்டைகள்

## ஒரு கிலோ 880/=

கொழும்பு, ஏப். 21



முட்டையை கிலோ கணக்கில் விற்பனை செய்வதற்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய ஒரு கிலோகிராம் வெள்ளை முட்டை 880 ரூபாவாகவும் ஒரு கிலோ சிவப்பு முட்டை 920 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெள்ளை நிற முட்டை ஒன்று 44 ரூபாவாகவும், சிவப்பு முட்டை ஒன்று 46 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலைக்கும் விற்பனை செய்யவேண்டும்.

இந்த நிர்ணய விலைக்கு மேல் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 'ஸ்ரீ' என்ற சொல்லால் நாட்டுக்குப் பேரழிவு!

## வான சாஸ்திரி அநுர கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.21



சிலோன் என்ற நாட்டின் பெயரை ஸ்ரீலங்கா என மாற்றியதே நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்குக் காரணம் என விஞ்ஞான எழுத்தாளரும், வான சாஸ்திரியுமான அநுர சி.பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாராநாயக்க மற்றும் விஜய குமாரதுங்கவின் படுகொலையிலிருந்து நட்டமடைந்த பல நிறுவனங்கள் வரை 'ஸ்ரீ' என்ற சொல் பெரும் அழிவைக் கொடுத்துள்ளது. இலங்கையின் இறுதி அரசனின் பெயர் கூட ஸ்ரீ விக்ரமராஜசிங்கனே. அரசியல் தலைவர்களின் பெயர், அரசியல் கட்சிகளின் பெயர், அரச நிறுவனங்களின் பெயர் மற்றும் நாட்டின் பெயருக்கு முன் 'ஸ்ரீ' என்ற சொல்லை பாவிப்பதுதான் நாட்டை இந்த வங்குரோத்து நிலைக்குத் தள்ளியிருக்கிறது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தனது பதவிக்காலத்தில் போக்குவரத்துச்சபை, கப்பல் கூட்டுத்தாபனம், ரயில்வே திணைக்களம், மத்திய வங்கி என்பவற்றின் முன்பாக ஸ்ரீலங்கா என்ற சொல்லைச் சேர்த்தார். இப்போது அவை பெரும் நட்டத்தில் இயங்குகின்றன.

1956 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உருவாக்கத்திலிருந்து எமது நாட்டுக்கு துரதிர்ஷ்டம் வந்தது. அந்தக் கட்சியை நிறுவிய பண்டாரநாயக்க, வாகன எண் பலகைகளில் 'ஸ்ரீ' எனும் எழுத்தை சேர்த்தார். அதன்பின்னர் நாட்டில் சிங்கள- தமிழ் இனக் கலவரம் தோன்றி பெரும் உயிர் உடைமைச் சேதம் ஏற்பட்டது. பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநர் படுகொலை செய்யப்பட்டார். இந்த விடயத்தை நான் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் சுட்டிக்காட்டவுள்ளேன்- என்றார். (எ-6)

# சீன எழுத்துடன்கூடிய வளையத்துடன் புறா!

## தமிழக மீனவர்களிடம் தஞ்சம்

கொழும்பு, ஏப்.21

இலங்கையைச் சேர்ந்த புறா ஒன்று தமிழக மீனவர் படகில் தஞ்சமடைந்திருந்த நிலையில், அதன் காலில் கட்டப்பட்டிருந்த சீன எழுத்துக்களுடன் கூடிய வளையம் தொடர்பில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அரசபாண்டி என்பவரது நாட்டுப் படகில் பாம்பனில் இருந்து 13 கிலோமீற்றரில் பாக்ஜலசந்திக் கடலில் மீனவர்கள் மீன்பிடித்தனர். அப்போது புறா ஒன்று அந்தப் படகில் தஞ்சமடைந்தது.

அந்தப் புறாவை மீட்ட மீனவர்கள் இராமேஸ்வரம் கொண்டு சென்றதுடன், அங்கு புறா வளர்ப்பில் ஈடுபடும் மீனவர் ஒருவரிடம் கையளித்துள்ளனர்.

அந்தப் புறாவின் காலிலுள்ள வளையத்தில் யாழ்ப்பாணம், சுதன் என்றும் கைபேசி இலக்கம் ஒன்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றொரு காலில் சீன எழுத்துக்கள் பொறித்த ஸ்டிக்கர் ஒன்றும், அதன் கீழ் எம்.எப்.3209 என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தச் சீன எழுத்துக்களுடன் கூடிய வளையம் தொடர்பில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட புறா 'ஹோமர்' என்ற இனத்தைச் சேர்ந்தது என்றும், இது தொடர்ந்து 300 கிலோமீற்றர் பறக்கக்கூடியது என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

# ஐ.ஓ.சி. பெயரில் போலித் தகவல்

கொழும்பு, ஏப்.21

வாகன எரிபொருள் திறன் தொடர்பான சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்களை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மறுத்துள்ளது.

அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக கொள்ளளவுக்கு அதிகமாக எரிபொருள் நிரப்புவதைத் தவிர்க்கவேண்டும் என்று வாகன உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும், எரிபொருள்தாங்கி வெடிக்கக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என்றும் ஐ.ஓ.சி. நிறுவனத்தைச் சுட்டிக்காட்டி சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

இது தொடர்பான தெளிவுபடுத்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள ஐ.ஓ.சி, அத்தகைய எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. இது சமூக ஊடகத் தளங்களில் பரப்பப்படும் ஒரு போலிசெய்தி.

கால நிலைகளைப் பொருட்படுத்தாமல் வாகனத்தயாரிப்பாளர்களால் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச வரம்பு வரை வாகனங்களில் எரிபொருளை நிரப்புவது முற்றிலும் பாதுகாப்பானது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கூட்டுத்தாபனமாகும் ரயில்வே திணைக்களம்!

## பேச்சுக்கள் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.21

ரயில்வே திணைக்களத்தைக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளதாவது:-

ரயில்வே திணைக்களம் அண்மைக்காலத்தில் வருடாந்தம் 10 பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்றது. 2021 ஆம் ஆண்டு ரயில்வே திணைக்களத்துக்கு 2.6 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது. ஆனால், 2.3 பில்லியன் ரூபா ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாகவும், 2.7 பில்லியன் ரூபா சம்பளமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரையின்படி ரயில்வே திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



ரயில்வே தொழிற்சங்கங்களுடன் இது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிர்வரும் 25ஆம் திகதி

# கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் ஆதரவு



**யாழ்ப்பாணம், ஏப்.21**

**தமிழ்த் தேசியக் கட்சிகளால் எதிர் வரும் 25ஆம் திகதி நடத்தப்படவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். வணிகர் சங்கம் ஆதரவு தெரிவித் துள்ளது.**

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை நிறுத்தக்கோரியும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதை நிறுத்தக்கோரியும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழு அடைப்புப்போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு முன்வைக்கப்படும் நிலையில், அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு நாடாளுமன்றத்துக்குள் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் யாழ். வணிகர் கழகத்துக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் தமிழ்க் கட்சிகளின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

## சில்லுக்குள் சிக்குண்ட தீயணைப்புப் படைவீரர்

*போதனா மருத்துவமனையில் சேர்ப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனச் சில்லினுள் சிக்குண்ட தீயணைப்புப் படைவீரரொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளார்.

தீயணைப்பு வாகனம் 'ஹாண்ட் பிரேக்' போடப்படாமல் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட நிலையில் வாகனம் மெதுவாக நகர, அதனைக் கண்ட தீயணைப்புப் படைவீரரொருவர் அதனை நிறுத்துவதற்காக கல் ஒன்றை வைக்க முயன்ற நிலையில் சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்துள்ளார். காயமடைந்த தீயணைப்புப் படைவீரர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-இ)



## சட்டவிரோத மணலகழ்வு வல்லிபுரத்தில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

வடமராட்சி, வல்லிபுரப் பகுதியில் சட்டவிரோத மணலகழ்வில் ஈடுபட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் குடத்தனை அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக வல்லிபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன என பொதுமக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அதனைத் தடுக்கும் முகமாக குடத்தனை அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது வல்லிபுரப் பகுதியில் சட்டவிரோத மணலகழ்வில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்ததுடன் கன்டர் ரக வாகனம் மற்றும் ஒரு படிரக வாகனம் ஆகியவற்றையும் கையகப்படுத்தினர்.

சந்தேகநபர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ச-இ)

## மடுக்காட்டில் மாயமான பொலிஸ் அதிகாரி மீட்பு

மன்னார், ஏப். 21

மன்னாரில் பொலிஸாரின் சிற்றுண்டிச் சாலைக்கு விறகு எடுப்பதற்காக நேற்றுமுன்தினம் மதியம் மடு காட்டுப்பகுதிக்குச் சென்று காணாமற்போன பொலிஸ் சார்ஜன்ட் பெரிய பண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியில் நேற்று மீட்கப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

மடு பொலிஸ் அதிகாரிகள் குழுவும் மன்னார் தலைமையக பொலிஸ் அதிகாரிகள் குழுவும் இணைந்து காட்டில் காணாமற்போன பொலிஸ் சார்ஜன்டை கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தன. ஆனாலும் நேற்றுமுன்தினம் மாலை வரையில் கண்டுபிடிக்கமுடியவில்லை. தேடுதல்கள் தொடர்ந்த நிலையில் காணாமற்போன பொலிஸ் சார்ஜன்ட் பெரிய பண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

அவர் பாதைமாறிச் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ஒ-213)

## நடமாடும் சேவையூடாக சான்றிதழ்கள் வழங்கல்

சாவகச்சேரி, ஏப். 21

தென்மராட்சிப் பிரதேச செயலக மேலதிக பதிவாளர் பணியகத்தால் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் இல்லாதோருக்கு நடமாடும் சேவைகள் ஊடாக சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. 'புதிய கிராமம் புதிய நாடு' தேசிய ஒருங்கிணைந்த பங்குபற்றல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

முதற்கட்டமாக [illegible] பிரிவில் நடமாடும் சேவை [illegible] நடத்தப்பட்டது. (ச-9)





வலிகாமம் வலயத்தில உள்ள பேமஸான பெண்கள் பள்ளிக்கூடத்தில ஒரு மாஸ்ரர், பிள்ளையளோட சேட்டை விட்டதைப் பற்றித்தான் இப்ப ஊரெல்லாம் ஒரே கதை. ஏற்கனவே அந்த மாஸ்ரர் முந்திப் படிப்பிச்ச பள்ளிக்கூடத்திலையும் இப்பிடியான சேட்டை விட்டுத்தான் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு மாறினவராம். ஆனாலும் ஆடின காலும் பாடின வாயும் சும்மாயிருக்காதே. அதால இந்தப் பள்ளிக்கூடத்திலையும் தன்ர வேலையைத் தொடங்கிட்டார். வகுப்பில உள்ள கொஞ்சப் பிள்ளையளை தனிப்பட்ட முறையில வைச்சு 'டபிள் மீனிங்கில' கதைக்கிறதுதான் இவரின்ர பொழுதுபோக்கு. சில பிள்ளையள் பயத்தில இதைப்பற்றி வெளியில மூச்சுக் காட்டேலை. ஆனால் ஒருபிள்ளை துணிஞ்சு இதைப்போய் வீட்டில சொல்ல, பெற்றோர் பள்ளிக்கூடத்துக்கு வந்து முறையிட்டிருக்கினம்.

ஆனால் பிரின்சிபல் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளேலை. மாஸ்ரருக்கு சப்போர்ட்டாத்தான் அவாவும் கதைச்சிருக்கிறா. கடைசியில 'உங்கட பிள்ளைக்கு இஞ்ச படிக்கிறது கஷ்டமெண்டால் சேர்டிபிக்கெட்டை எடுத்துக்கொண்டு வேற பள்ளிக்கூடத்துக்குப் போங்கோ' எண்டு பிரின்சிபல் சொல்லியிருக்கிறா. அதுக்குப் பிறகுதான், அவை தங்கட பிள்ளையை கிட்ட உள்ள இன்னொரு பள்ளிக்கூடத்தில சேர்த்திட்டு, இப்ப பொலிஸிலையும் ரிப்போர்ட் போட்டிருக்கினம்.

இந்த விசயம் தெரிஞ்சு, பிரச்சினைக்குரிய பள்ளிக்கூட பிரின்சிபலிட்ட போன் பண்ணி 'இந்தச் செய்தி உண்மையோ?' எண்டு கேக்க, அவா சீறிப்பாய வெளிக்கிட்டுட்டா. 'இதைப்பற்றிக் கருத்துக்கூற நான் விரும்பேலை' எண்டு போனைக் 'கட்' பண்ணிப் போட்டா. பிறகு திரும்ப அவாவே போன் பண்ணி 'உம்மட பேர் என்ன? இனிசியல் என்ன? ஊரென்ன?' எண்டெல்லாம் விசாரிச்சிட்டு வைச்சிட்டா. பிறகு அந்த விபரங்களை தனக்கு நெருக்கமான ஆக்களுக்கு அனுப்பி 'பள்ளிக்கூடக் கதை ஊரெல்லாம் பரவிட்டுபோல. இப்ப ஒராள்(பட்சி) என்னை எடுத்துக் கேட்டது. ஆளின்ர விபரம் அனுப்பி வைச்சிருக்கிறன். ஒருக்கா விசாரியுங்கோ' எண்டு பட்சியை ஆரெண்டு கண்டுபிடிக்கச் சொல்லியிருக்கிறா.

இப்பிடி பட்சியை விசாரிக்க எடுத்த முயற்சியை, அந்தப் பிள்ளையோட சேட்டை விட்ட மாஸ்ரருக்கு எடுத்திருந்தா பள்ளிக்கூடத்துக்கும் கெட்டபேர் வந்திருக்காதே. பிறகு இதைப்பற்றி விசாரிக்க பள்ளிக்கூடத்துக்குப் போன அதிகாரிமாருக்கும் அம்மணி ஒத்துழைப்புக் குடுக்காம முரண்டுபிடிச்சிருக்கிறா. இப்ப அதெல்லாம் சேர்ந்து வழக்கா மாறியிருக்கு பாருங்கோ. இப்பிடி பள்ளிக்கூட பிரின்சிபல் இருந்தால், பிழை விடுகிற ஆக்களுக்கு வசதிதான் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன். கட்டுக்கரைக்குளத்தின் கீழ்

# 2,000 ஏக்கரில் சிறுதானியம் 3,000 ஏக்கரில் சிறுபோகம்

**மன்னார், ஏப். 21**
**மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைகுளத்தின் கீழ் 3 ஆயிரத்து 665 ஏக்கரில் சிறுபோகமும் 2 ஆயிரத்து 500 ஏக்கரில் சிறுதானியமும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிலங்குளத்திலுள்ள கட்டுக்கரைக்குள விவசாயிகள் கூட்ட மண்டபத்தில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் இடம்பெற்றது.
இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.
மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்;
மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாக விளங்கும் கட்டுகரைக் குளத்தின் நீரின் அளவுக்கு அமைவாக சிறுபோகம் மேற்கொள்ள ஆலோசனைகள் - தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
கட்டுக்கரைக் குளத்தில் தற்போது 11.4 அடி நீர் காணப்படுவதால் பத்து ஏக்கர் விவசாயக் காணியுள்ளோருக்கு ஒரு ஏக்கர் புலவி அதாவது பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் சிறுபோகம் செய்யலாம்.
ஏனைய மாவட்டங்களைப்போல அல்லாது மன்னார் மாவட்டத்தில் புலவிலேயே சிறுபோகம் செய்யப்படுகின்றமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்படுகிறது.
அதற்கமைவாக இம்முறை மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 ஏக்கரில் சிறுதானியமும் 3 ஆயிரத்து 665 ஏக்கரில் சிறுபோகமும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-60)

# நான்கு பிடியாணைகள் சிக்கினார் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், ஏப். 21
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 4 பகிரங்க பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர் நீதிமன்றுக்கு செல்லாது தலைமறைவாகியிருந்த நிலையில் வெவ்வேறு வழக்குகளில் 4 பகிரங்க பிடியாணைகள் சாவகச்சேரி நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது.
அதற்கமைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் சிக்கினார்.
சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# 15 லீற்றர் கசிப்புடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கைது இடம்பெற்றது.
சந்தேகநபர்களான 23 வயதான இளைஞரிடமிருந்து 10 லீற்றர் கசிப்பும் 17 வயதுடைய இளைஞரிடமிருந்து 5 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசாரணையின்பின் சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




தொலைநோக்குப் பார்வை கொண்டவர் நீங்கள். சோபகிருது புத்தாண்டு உங்கள் ராசிக்கு 8வது ராசியில் பிறக்கிறது. வீட்டில் சுப நிகழ்வுகள் கூடி வரும். தம்பதிக்கு இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனி, ஆடி மாதங்களில் எதிர்பாராத திடீர் யோகம் உண்டாகும். அதிகாரப் பதவிகள் தேடி வரும். குடும்பத்தில் குழப்பங்கள் விலகும்.
மகளுக்கு நல்ல வரன் அமையும்கல்யாணம் கோலாகலமாக முடியும். 14.4.23 முதல் 21.4.23 வரை குருபகவான் 10ம் வீட்டில் தொடர்வதால் வேலைச்சுமை பதற்றம் இருக்கவே செய்யும்.
22.4.23 முதல் வருடம் முடியும் வரை குரு உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்வதால் திடீர் யோகம், அதிர்ஷ்டம் உண்டாகும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். 14.4.23 முதல் 25.8.23 வரை மற்றும் 20.12.23 முதல் வருடம் முடியும் வரை 9ம் வீட்டிற்குச் சனி வருவதால் தன்னம்பிக்கை துளிர்விடும். வழக்குகள் சாதகமாகும். மாசி, பங்குனி மாதங்களில் வீண் அலைச்சல், சிறு சிறு விபத்துகள் நிகழக்கூடும்.
சொத்து விஷயங்களில் நிதானம் தேவை. 26.8.23 முதல் 19.12.23 வரை சனி பகவான் அஷ்டமத்துச் சனியாக வருவதால் பண இழப்பு, காரியத் தடைகள், ஏமாற்றங்கள் வந்து போகும். உரிமைக்காக நீதிமன்றங்கள் செல்ல நேரிடும். மற்றவர்களுக்காக எதிலும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வெளியூர்ப் பயணங்களின்போது, ஆபரணங்களைத் தவிர்ப்பது நல்லது.
ஆண்டுத் தொடக்கம் முதல் 7.10.23 வரை கேது உங்கள் ராசிக்கு 5ல் நிற்பதால் பிள்ளைகளால் மனச் சஞ்சலம் உண்டு. தாய்வழி உறவினர்களிடையே மனஸ்தாபம் வெடிக்கும். பூர்வீகச் சொத்துக்காக அதிகம் செலவு செய்ய வேண்டிவரும். எவரிடமும் சொந்த விஷயங்களைப் பகிரவேண்டாம். ராகு உங்கள் ராசிக்கு 11ல் அமர்வதால், பழைய சிக்கல்களை அணுகி வெற்றி பெறுவீர்கள்.
8.10.2023 முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 4ல் கேதுவும், 10ல் ராகுவும் நுழைவதால், தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். தாயாரின் உடல் நலம் பாதிக்கும். காரிய தாமதம், வாகன விபத்துகள் வந்து போகும்.
25.12.23 முதல் 19.1.24 வரை சுக்ரன் 6ல் மறைவதால் கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப்போவது நல்லது. வாகன விபத்துகள் வரக்கூடும். 4.2.24 முதல் 14.3.24 வரை செவ்வாய் உங்கள் ராசிக்கு 8ல் அமர்வதால், வாழ்க்கைத் துணைவருக்கு சிறியளவில் சிகிச்சைகள் செய்ய வேண்டி வரும்.
உத்தியோகஸ்தர்களே! உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரியின் கழுகுப் பார்வை இனி கனிவுப் பார்வையாக மாறும். தை, மாசி, பங்குனி மாதங்களில் பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் உண்டு.

**மொத்தத்தில் இந்தச் சோபகிருது வருடம், ஒருபுறம் அலைச்சலைத் தந்தாலும் மறுபுறம் பண வரவையும் புகழையும் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும்.



**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.



**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.



**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நன்மை உண்டாகும். பேசும் போது பொறுமை வேண்டும்.



**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.



**கன்னி:** உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. உற்சாகம் பிறக்கும்.



**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் உண்டாகும்.



**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.



**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.



**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.



**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டிவரும். சிலருக்கு சேர்க்கை உண்டாகும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும் பொறுப்பாக நடந்தால் மகிழ்ச்சி ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்கட்டுவித்தைகள் இனியும் வேண்டாம்

தென்னாபிரிக்காப்பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான சட்டவரைவை மேற்கொள்ள அமைச்சரவை இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுமதி வழங்கியிருந்தது. உண்மை நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கருத்தாடல்கள் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்திலேயே தோற்றம்பெற்றிருந்தன. ஆனாலும் அது நடைமுறைக்கு வராதநிலையில், தற்போதைய அரசாங்கம் இந்த ஆணைக்குழுவை உருவாக்குவதில் தீவிர சிரத்தை காட்டுகின்றது. கடந்த 13 ஆண்டுகளாக சர்வதேச சமூகத்தால் இலங்கை மீது முன்வைக்கப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கு நீதியை நிலைநாட்டவில்லை என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுவித்துக்கொள்வதற்காக இறுதி முயற்சியாக ரணில் அரசாங்கம் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை கையில் எடுத்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தென்னாபிரிக்காவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டு உண்மை நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக ஆராய்ந்திருந்தார். அதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு அழைக்கப்பட்ட சில தரப்பினருடன் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், ஜனாதிபதிக்கு வழங்கிய அறிக்கையில் வடக்கு மக்கள் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள் என்று பச்சைப்பொய்யைக் கூறியது.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் அதற்குப் பொறுப்புக்கூறுவது தொடர்பிலும் அரசினுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் அந்த ஆணைக்குழு மிகவும் அவசியம். இலங்கை இறைமையுள்ள நாடு. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கு ஆதரவளித்தே தீரவேண்டும். அதைவிடுத்து சர்வதேசம்தான் தீர்வைத் தரும் என்று காத்திருப்பவர்கள் மற்றும் ஆணைக்குழுவை எதிர்ப்பது தொடர்பிலும் நான் கருத்துக்கூறவும் விரும்பவுமில்லை அதுபற்றி அலட்டிக்கொள்ளவும் விரும்பவுமில்லை' என்று தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'வடக்கு மக்கள் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்' என்று ஏன் பச்சைப் பொய்யைக் கூறியது என்பதை ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திலிருந்து புரிந்துகொள்ளமுடியும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்க எவருமே தயாரில்லை. எப்படியாவது உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து அதன் ஊடாகப் பொறுப்புக்கூறல் விவகாரத்தை முடித்து வைப்பதற்கே ஆட்சித் தலைமை விரும்புகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதில் வேடிக்கையான விடயம் ஒன்றையும் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் அதனையே செயற்படுத்த முனைவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தில் இந்த ஆணைக்குழு அமைப்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது உண்மைதான். ஆனால், அதில் 'பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கு முன்னுரிமையளித்தே இந்த ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும்' என்ற விடயத்தை ரணில் விக்கிரமசிங்க தெளிவாகவே மறைத்து விட்டார்.

பொறுப்புக்கூறல் தொடர்பான எந்தவொரு பொறிமுறையும் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்வாங்கியே உருவாக்கப்படவேண்டும் என்று ஐ.நா. தீர்மானம் கூறும் நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளமாட்டேன் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை யாருக்காக அமைக்கின்றார்? வெறும் கண்துடைப்புக்காக அமைக்கப்படும் இந்த ஆணைக்குழுவால் என்ன பயன்? அப்படி அமைக்கப்படும் ஆணைக்குழுவை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்காதவிடத்து பொறுப்புக்கூறல் பிரச்சினை தீரப்போவதில்லையே?

பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்காத காணாமல்ஆக்கப்பட்டோர் பணியகத்தை அமைத்ததால் இலங்கை அரசாங்கத்தால் என்னத்தை சாதிக்க முடிந்தது? காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்கள் இன்றும் போராடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் விருப்புக்குமாறாக அரசாங்கம் எதைச் செய்தாலும் அதில் வெற்றியடைய முடியாது என்பதையே இவை காட்டுகின்றன. இனியாவது கண்கட்டு வித்தைகளைச் செய்வதைவிடுத்து பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்வாங்கி உருப்படியாகச் செய்யுங்கள்.

நாளொரு நல்வார்த்தை

"தன்னை உயர்ந்தவனாகவும் மற்றோரை தாழ்ந்தவனாகவும் நினைப்பவன் ஒரு மனநோயாளி...!"
– அம்பேத்கர்




# ரணிலின் தீர்மானம் ஏற்புடையது அல்ல!

## விரிவுரையாளர் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.21**

**உண்மையான தேவையைக் கருத்திற் கொண்டு கல்வியை அத்தியாவசிய சேவையாக்குவதே பொருத்தமானது. விடைத்தாள் மதிப்பீட்டுக்காக அதை அத்தியாவசிய சேவையாக மாற்றுவது ஏற்புடையதல்ல.**

இவ்வாறு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டை மேலும் தாமதப்படுத்தினால், அத்தியாவசிய சேவையாக கல்விச் சேவை மாற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாமா பன்னஹக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தங்களது பிரச்சினைக்கான தீர்வை வழங்க அரசாங்கம் இதுவரை முன்வரவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(எ-இ)

## சீனத் தொலைக்காட்சி இலங்கையில் ஒளிபரப்பு

கொழும்பு, ஏப்.21

இலங்கையில் தற்போது சீனத் தொலைக்காட்சி சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீன அலைவரிசையில் இலவச பரீட்சார்த்த ஒளிபரப்பு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சீன ஒளிபரப்பு சேவையான சைனிஸ் குளோபல் ரெலிவிஷன் நெற்வேக் அலைவரிசை தற்போது கேபிள் இணைப்பு இன்றி ஒளிபரப்பாகின்றது.

இலங்கை அரச தொலைக்காட்சிகள் யூ.ஏச்.எப். அலைவரிசையில் ' ஒளிபரப்பாகின்றன. அவை கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து அலைவரிசைப் பங்காளிகளைக் கோரியிருந்தன. அதன்மூலம் சீன ஒளிபரப்புச் சேவை, சேவையை ஆரம்பித்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## 1,320 மருத்துவர்கள் புதிதாக உள்ளீர்ப்பு!

கொழும்பு, ஏப். 21

புதிய மருத்துவர்கள் ஆயிரத்து 320 பேரை எதிர்வரும் 25 ஆம் திகதி நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாடுமுழுவதுமுள்ள மருத்துவமனைகளுக்கு புதிய மருத்துவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். புதிதாக நியமிக்கப்படும் மருத்துவர்கள் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது 19 ஆயிரமாகக் காணப்படும் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை புதிய நியமனங்களின் பின் 20 ஆயிரத்தைத் தாண்டும்.

அதேவேளை மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 வரை உள்ளமையால் அதனை 5 ஆயிரமாக உயர்த்த அறிவுறுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)


நாளை
22.04.2023
சனிக்கிழமை
சித்திரை 09

சுபநேரம் : 03.01 - 04.31
ராகுகாலம் : 09.01 - 10.31

ரமழான் பெருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



உதயன் – சஞ்சீவியின்
முன்னாள் சிரேஷ்ட உதவி ஆசிரியர்

## சரவணமுத்து தங்கராஜா

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும்,
அவர் சார்ந்தோருக்கும் உதயனின்
அனுதாபமும் ஆறுதல்களும்...

உதயன் குழுமத்தலைவரும்
பணியாளர்களும்


### பால்மாவின் விலை ஜூனில் குறையலாம்

இறக்குமதி செய்யப்படும் பால்மா விலையை மேலும் குறைப்பதற்கு பிரதான பால்மா இறக்குமதி நிறுவனங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளன.

குறித்த நிறுவன பிரதிநிதிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே இறக்குமதி செய்யப்படும் பால்மா விலையைக் குறைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பால்மாக்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜுன் மாதமளவில் பால்மாக்களின் விலையில் மீண்டும் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிக்கை விரைவில் வர்த்தக அமைச்சால் வெளியிடப்படும் என வர்த்தக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



### உயிருக்குப் போராடும் யானைக்குச் சிகிச்சை

முல்லைத்தீவு, ஏப். 21

மாங்குளம் கோணக்குளம் பகுதியில் காயங்கள் ஏற்பட்டு உயிருக்குப் போராடிய நிலையில் காணப்பட்ட யானை ஒன்றுக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் காலில் காயங்கள் ஏற்பட்ட தடயங்களுடன் குளத்தில் புதைந்த நிலையில் யானை ஒன்று காணப்படுகிறது என பொதுமக்களால் ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைக்கு சிகிச்சை அளித்துள்ளதுடன் உணவு வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் குளத்திலிருந்து யானையை மீட்பதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர். (ச-19)


# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1932



மறைவு 19 . 04 . 2023

## திருமதி சந்திரசேகரம் பரமேஸ்வரி

இணுவில் கிழக்கு, வேம்போலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேகரம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (19.04.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் சந்திரசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகராசா (தியாகு) மற்றும் சாரதாமணி, யோகரட்ணம், செல்வராசா, சண்முகராசா (சின்னன்), விஜயலட்சமி (கொலண்ட்), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விஸ்வலிங்கம், ராசதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சின்னன் - 077 666 5455
பிரகாஷ் - 077 494 6346

தகவல்:
குடும்பத்தினர்

(cs50099) (N-1)



# மரண அறிவித்தல்



## சபாரட்ணம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் - முறைசாராக்கல்வி, யாழ்ப்பாணம். பிரதிக்கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல், யாழ்ப்பாணம், பிரதேசக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடக்கு, கிழக்கு மாகாணம்)

நல்லூர் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் 906 / 23, பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சுப்பிரமணியம் நேற்று (20.04.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், சுபத்திரா (நிர்வாக அலுவலர், ஜமுனா வில்லா), சுமந்திரா (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசீகரன் (உரிமையாளர், மாகோர்சா கிறீன்), துசியந்தன் (ஆசிரிய ஆலோசகர் - யாழ். வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், புருஷோத், சஞ்சனா, தினுஷன், கவிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, கமலேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, சத்தியனேஸ்வரி, மகேந்திரன், திலகராணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், சிவரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

906/23, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.50108) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமாணிப் பட்டங்கள் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டம் கற்கைநெறி, இளைஞர் மற்றும் சமூக அபிவிருத்தியில் கலைமாணிப்பட்டம் கற்கைநெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. உ/த பரீட்சையில் ஏதாவது ஒருதுறையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் அடிப்படைக் கற்கைநெறி சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் முதலாம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாக மற்றும் 021 222 3374 தொலைபேசியூடாக தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## வீரகத்தி விநாயகர் சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 21

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று விநாயகர் வீதிவலம் வந்து அருள்பாலிப்பார் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-17)

## பள்ளிவாசலுக்கு மிரட்டல் பொலிஸ் தீவிர விசாரணை

கொழும்பு, ஏப்.21

மத்திய மாகாணத்தில் உள்ள அலவத்துகொட பள்ளிவாசலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக புலனாய்வுத் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அலவத்துகொட பொலிஸ் நிலையத்துக்கு வந்த தொலைபேசி அழைப்பு மூலம் இந்தத் தகவல் கிடைத்தது என்றும், அதையடுத்து விரைவான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் தொடர்பான தகவல் கிடைப்பதற்கு முன்னதாக, இது தொடர்பில் உளவுத்துறை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அலவத்துகொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கூறியுள்ளார். இருந்தபோதும் அந்தப் பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக உளவுத்துறைக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளரும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# INVITATION FOR BID (2023/06)
# Regional Directorate of Health Service, Jaffna.

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from **World Bank** towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2023 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.

02. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

03. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

*"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

05. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents

06. and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.

07. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

08. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.

09. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

10. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

11. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 21.04.2023 until 04.05.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 28.04.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 05.05.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/05 | Improvement of Accessibility to Cancer Unit at BH Tellippalai,Jaffna. | 0.27 | 31Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/09 | Construction of Path at Base Hospital Kayts,Jaffna. | 0.33 | 37Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,500.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/10 | Establishment of Blood Bank at Base Hospital Kayts,Jaffna. | 1.22 | 72Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/11 | Repair and Renovation of Wash room at Ward No.04 Base Hospital Kayts, Jaffna. | 1.46 | 74Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/17 | Construction of Security Hut Base Hospital Kayts. | 1.58 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/21 | Repair and Renovation of Wash room Ward No.02 at Base Hospital Kayts,Jaffna. | 1.44 | 74Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/22 | Improvement Work at Base Hospital Point Pedro,Jaffna.-Mortuary | 0.56 | 58Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/23 | Repair and Renovation of Wash room ward No.03,04,05,06 at Base Hospital Chavakachcheri | 1.58 | 76Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/25 | Repair and Renovation of NO Quarters (Female) at Base Hospital Katys,Jaffna | 1.45 | 74Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 21.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/29 | Improvement of Ward 6,BH Tellippalai | 0.17 | 20Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 2,000.00 | Till 21.07.2023 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

(cr.37131) (2x 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்
### விலைமனு கேள்விக்கான அழைப்பு
### வாகன சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிசீராக்கி திருத்தமும் பராமரிப்பும் சேவை - 2023

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான. தகைமைவாய்ந்த வாகன சுத்திகரிப்பு மற்றும் வளிசீராக்கி திருத்தமும் பராமரிப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

**யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிசீராக்கி திருத்தமும் பராமரிப்பும்**

| பெறுகை இல | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|
| RDHS/VS/2023 | வாகன சுத்திகரிப்பு | 100,000.00 | 12.05.2023 மு.ப 10.00 |
| RDHS/ACS/2023 | வளிசீராக்கி திருத்தமும் பராமரிப்பும் | 100,000.00 | 12.05.2023 மு.ப 10.00 |

✓ வாகன சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிசீராக்கி திருத்தமும் பராமரிப்பு ஒவ்வொன்றுக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 3,000.00 செலுத்தப்பட வேண்டும்.

01) விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் இல 572/3 ஆஸ்பத்திரி வீதி.யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் - 021 222 2278 / 021 222 4557 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

02) நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் ‘Application for Bid documents’ என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கமுடியாத வைப்புத்தொகையாக ரூபா 3000 இனை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.04.2023 தொடக்கம் 11.05.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

03) விலைக்கேள்விகள் 12.05.2023 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறித்த விண்ணப்பங்கள 12.05.2023 காலை 10.00 க்கு விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

04) கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகார முள்ளது.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
**021-222 2278, 021- 222 4557**
**தொலைநகல் : 021-222-9971**
**மின்னஞ்சல்** rdhsjaffna15@gmail.com

CR/39682)AH-I



## INVITATION FOR BID 2023/2024
### Maintenance & Services of Air Conditioners in the
### OFFICE OF THE REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES, KILINOCHCHI

01) The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified Applicants for “Maintenance & Services of Air Conditioning Systems at Regional Director of Health Services, Kilinochchi, for the year 2023/2024” as described below.

02) Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

03) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under ‘EM5 or above’ grade in air conditioning specification at Construction Industry Development authority (CIDA) and Business Registration for supply and maintenance of Air conditioners.

04) Interested bidders may obtain further information from address given below in 5, and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 3.00 P.M.

05) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road, Kilinochchi . (T.P: 021 228 5932/021 2285719, Fax: 021 2285931) from 9.00 A.M to 3.00 P.M during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

06) Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road ,Kilinochchi on or before on the date mentioned in the table. Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder’s representatives who choose to attend.

07) Pre-Bid Meeting will be held at Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road, Kilinochchi commencing at on the date mentioned in the table.

08) Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| CATEGORY 1 | Document Issuing/Purchasing Period | | | From 20.04.2023 until 09.05.2023 | |
|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | at 11.00A.M on 27.04.2023 | |
| | Closing and Opening of Bids | | | at 10.30 A.M on 10.05.2023 | |
| Bid No | Description of Work | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
| | | | | Security Amount | Valid Period |
| NP/KOC/RDHS/AC/2023 | Maintenance & Services of Air conditioners | EM5 or Above | 2,000.00 | 50,000.00 | 25.07.2023 |

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Office of the Regional Director of Health Services,**
**Kilinochchi.**
**TP- 0212285719, Fax- 0212285931 E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**


# சிராஜ் பேரெழுச்சி பெங்களூர் வெற்றி



ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணியைத் தோற்கடித்தது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர். டுபிளஸியின் அதிரடியான ஆட்டமும், சிராஜின் எழுச்சியான வேகமும் பெங்களூர் அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றின.

டுபிளஸி காயமடைந்து ‘இம்பக்ட்’ வீரராக நேற்று விளையாடியதால், பெங்களூர் அணியை கோலி வழிநடத்தினார். நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித்தலைவர் சாம் கரன் முதலில் பந்துவீசத் தீர்மானித்தார். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டுபிளஸி, விராட் கோலி இணை மிகச் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினார்கள். இருவரின் இணைப்பாட்டத்தையும் பிரிக்க பஞ்சாப் அணியின் பந்து வீச்சாளர்கள் முயற்சி செய்தபோதிலும் அது கைகூடவில்லை. ப்ரார் வீசிய 17ஆவது ஓவரிலேயே முதலாவது விக்கெட்டாக கோலி ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் 47 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அவரைத் தொடர்ந்து வந்த மக்ஸ்வெல்லும் ப்ரார் வீசிய அடுத்த பந்திலேயே ‘டக் அவுட்’ ஆகி பவிலியன் திரும்பினார். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பிளஸிஸும் நாதன் எலியஸ் வீசிய அடுத்த ஓவரிலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் 56 பந்துகளை எதிர்கொண்டு 5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார். 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர் அணி.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக ப்ரார் 2 விக்கெட்டுக்களையும் அர்ஸ்தீப் சிங், எலியஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் முனைப்பில் களமிறங்கிய பஞ்சாப் அணி ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. ஒருமுனையில் பிரப்சிம்ரன் சிங் மாத்திரம் நிலைத்து நிற்க மறுமுனையில் களமிறங்கிய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆட்டம் பெங்களூரின் பக்கம் மாறியது. மத்தியவரிசை வீரரான ஜிட்டேஸ் சர்மா தனி ஆளாகப் போராடிய போதிலும் பின்வரிசை வீரர்களும் அவருக்கான ஒத்துழைப்பை வழங்காமல்விட 150 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது பஞ்சாப் அணி. பிரப்சிம்ரன் சிங் 30 பந்துகளில் 46 ஓட்டங்களையும் ஜித்தேஸ் சர்மா 27 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பெங்களூர் சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய சிராஜ் 4 விக்கெட்டுக்களையும், ஹசரங்க 2 விக்கெட்டுக்களையும், பார்னல், ஹர்சல் பட்டேல் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சிராஜ் தெரிவானார்.

(ம-ரி1)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சிவகுமாரி பேரின்பநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி மாணிக்கம் காசிப்பிள்ளை**
அவர்கள் கடந்த (19.04.2023)
புதன்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**வட்டமேசை -யா/ சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி** (CR/ 39684)AH-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை!

## வடக்கும் உள்ளடக்கம்

**யாழ்ப்பாணம், ஏப். 21**

**கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம், குருநாகல், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 8 மாவட்டங்களை கடும் வெப்பம் வாட்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது: மேற்குறிப்பிட்ட 8 மாவட்டங்களும் வெப்பமான காலநிலையால் பாதிக்கப்படும் என வெப்பச் சுட்டெண் காட்டுகின்றது.

ஆகவே, இந்தப் பகுதிகளில் வசிப்போர் முடிந்தவரை சூரியன் உச்சம் கொடுக்கும் மதிய வேளையில் வெளிப் பயணங்களைத் தவிர்க்க வேண்டும். நீரை அதிகமாகப் பருகுவதுடன் நீராகாரங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# எமக்கு மேய்ச்சல் தரையில்லை காணிகளோ சீனாவுக்கு தாரை!

## கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் ஆதங்கம்

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவை இன்றி கால்நடை வளர்ப்பில் பெரும் சவால்களுக்கு நாம் முகம்கொடுத்து வரும் நிலையில் இங்குள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாது அரசாங்கம் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இங்குள்ள காணிகளை தாரைவார்க்கின்றது என கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கம் ஆதங்கம் வெளியிட்டுள்ளது.


கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் ஊடக சந்திப்பு கிளிநொச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவு சங்க சமாசத் தலைவர், கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் உள்ளிட்டோர் தெரிவிக்கையில், போர்க் காலத்திலும் போர் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்தபோதும் மேய்ச்சல் தரையின்றி பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றோம்.

இதுகுறித்து அரச அதிகாரிகளிடமும் வருகை தரும் அமைச்சர்களிடமும் பலமுறை தெரியப்படுத்தியும் இன்றுவரை மேய்ச்சல் தரையின்றி அவதியுறுகின்றோம். அதனால் கால்நடை வளர்ப்பாளர்களின் உற்பத்திகள் பாதிப்படைகின்றன. 1954ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரணைமடுக்குளத்துக்கு தெற்குப் பகுதியில் சூரியபுரம் எனும் இடத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதன்பின் அரசாங்கம் அவற்றை மீளப்பெற்று விமான நிலையம் உள்ளிட்ட தேவைகளுக்கான பயன்பாட்டுக்கு அப்பகுதி கொண்டுவரப்பட்டது.

எமது கோரிக்கைக்கு செவிசாய்க்காது - எமக்கான தேவையைப் பூர்த்தி செய்யாதும் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு காணிகளை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றனர். (ச-113)



# சிலை அபகரிப்பு முயற்சி பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

பருத்தித்துறை பிள்ளையார் ஆலயத்தின் முகப்பிலுள்ள பெரிய பிள்ளையார் சிலையை எடுத்துச் செல்வதற்கு விஷமிகளால் எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

குறித்த ஆலயத்தின் முகப்பிலுள்ள பிள்ளையார் சிலை உண்டியலுடன் காணப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை அடியவர் ஒருவர் சிலையை வழிபட்டபோது சிலையின் காற்பகுதி உடைக்கப்பட்டிருந்தமையை அவதானித்த நிலையில் ஆலய நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தினார்.

சிலையும் உண்டியலும் கம்பிகளால் பிணைக்கப்பட்டிருந்தமையால் விஷமிகளால் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி கைகூடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அதிகளவான வெப்பம்; குடிதண்ணீர் மட்டுப்பாடு

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு அறிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 21

கிராஞ்சி குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் குழாய் வழி குடிதண்ணீர் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் நீரை சிக்கனமாக பயன்படுத்த மக்கள் முன்வரவேண்டும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை கோரியுள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பமான நிலைமை காரணமாக தொடர்ச்சியாக நீரைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக கிராஞ்சி குடிதண்ணீர் விநியோக திட்டத்தின் கீழ் குழாய் வழி விநியோகம் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும்.

எனவே, மக்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது. (ச-214)

# சிப்பாய் சாவு

கிளிநொச்சி 651 ஆவது காலாட்படை படைப்பிரிவில் இராணுவச் சிப்பாய் ஒருவர், தனது கைத்துப்பாக்கியால், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. காலி பிரதேசத்தை சேர்ந்த சிப்பாயை இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (ஒ-இ)

# வவு. மாவட்டத்தில் இம்முறை 22,948 ஏக்கரில் சிறுபோகம்

வவுனியா, ஏப்.21

வவுனியா மாவட்டத்தில் 22 ஆயிரத்து 948.68 ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஆண்டு 12 ஆயிரத்து 238 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளங்களில் உள்ள நீரின் அளவு மற்றும் புதிதாக நெற்செய்கை மேற்கொள்வதற்கு காணிகளை விவசாயிகள் தயார்ப்படுத்தியமை போன்ற காரணங்களால் சிறுபோக நெற்செய்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிறுபோக நெற்செய்கைக்கான பசளை வழங்கும் நடவடிக்கைகள் அந்தப் பகுதிக்குரிய கமநல சேவைத் திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-110)

# படகின் மூலம் ஐவர் தமிழகத்தில் தஞ்சம்

வவுனியா, ஏப். 21

இலங்கையிலிருந்து ஐவர் கடல்வழியாக நேற்று புதன்கிழமை தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். வவுனியா தேக்கன் தோட்டத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் அடங்கிய ஐவரே படகுமூலம் தமிழகம் அரிச்சல் முனைப் பகுதியில் கரையிறங்கியுள்ளனர்.

அவர்களை தமிழக கடலோரப் பாதுகாப்புப் பொலிஸார் மீட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்துக்கு வந்துள்ளோம் என அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (ச-இ)

# வன்முறைக்கும்பலால் ஊரெழுவில் வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 21

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப்பகுதியில் வன்முறைக் கும்பலால் கடந்த திங்கட்கிழமை இரவு வீடொன்று சேதப்படுத்தப்பட்டுள்ளது.

முகங்களை மறைத்தவாறு ஒரு மோட்டார் சைக்கிலில் வந்த 3 பேர் வீட்டின் யன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் ரூ. 2 லட்சம் பெறுமதியான பொருள்களையும் அடித்து நொருக்கி பெற்றோல் ஊற்றி எரித்துவிட்டு தப்பியோடியுள்ளனர்.

வீட்டில் இரண்டு பெண்கள் தனித்திருந்தவேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் நேற்றுமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லிக்கு முதல்வெற்றி!




ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

நாணயச்சுழற்சியை வென்ற டில்லி அணித்தலைவர் டேவிட் வோர்ணர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா அணியை தனது அசத்தலான மீள்வருகையின் மூலம் ஆட்டம் காண வைத்தார் இசாந் சர்மா. ஒருமுனையில் ஜேசன் றோய் விக்கெட்டை விட்டுக்கொடுக்காமலிருக்க மறுமுனையில் களமிறங்கிய கொல்கத்தா வீரர்கள் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார்கள். மத்திய வரிசையில் களமிறங்கிய ரஸல் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இதன்மூலம் கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. பந்துவீச்சில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தி பந்துவீசிய இசாந் சர்மா, நோட்ஜே, அக்சர் பட்டேல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

128 எனும் இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டில்லி அணிக்கு டேவிட் வோர்ணர் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த போதிலும் வோர்ணர் அரைச்சதம் கடந்தார். வருண் சக்கரவர்த்தி வீசிய 14 ஆவது ஓவரில் வோர்ணரும் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற டில்லியின் தடுமாற்றம் ஆரம்பமானது. இறுதி 2 ஓவர்களில் 12 ஓட்டங்கள் தேவைப்பட பொறுமையான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய அக்சர் பட்டேல் இறுதிவரை ஆட்டமிழக்காமல் கடைசி ஓவரில் டில்லிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். கொல்கத்தா சார்பில் வருண் சக்கரவர்த்தி, அனுகுல் றோய், நிதிஷ் ராணா தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (ம,ரி1)


**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.

077 327 6502



## மரண அறிவித்தல்



**பொன்னையா நடேசன்**

துன்னாலையை பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நடேசன் நேற்று (20.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சீதாதேவி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா கோணேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தயாவதி, தனவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற நந்தாவதி, தயாரூபன், கிருபாகரன் (ஆசிரியர்-கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜீவதாசன், பாலசுப்பிரமணியம் (ஜேர்மன்), சாந்தினிதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகம்மா, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சரஸ்வதி, துரைராசா, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனரும், அஜந்தன், டிலானி, றொசான், அபிசன், சாகித்யா, சரண்யா, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆகாஷ், துஷாரா, கபிசன், சுஜானி, அஸ்வின், டிசான், கஸ்மீரா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இராஜேஸ்வரி வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 069 0528
077 284 5340

தகவல்:
குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 • 09 • 1935



மறைவு 07 • 05 • 2016

**அமரர் திருமதி சரோஜினிதேவி சாம்பசிவம்**

**திதி: பிரதமை**

ஏழாண்டு கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம் பறந்து மறைந்தது ஏனோ அம்மா
எத்தனை உறவுகள் இருந்தாலும் அவை உங்கள்
இடத்தை நிரப்புமா?
குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்னமிட்டு
எம்மை அரவணைத்து இவ்வுலகில் நாம் வாழ
உழைத்தீர்கள் திரும்பி வர முடியாத தூரத்திற்கு
நீங்கள் போய் விட்டாலும் என்றும் எம்
மனதில் நிலைத்திருப்பீர்கள்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*


ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,மச்சான்மார்,
சகோதரி திருமதி க.செல்வராணி(பவா).



## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 05 - 1968



மறைவு 19 - 04 - 2023

**அப்புக்குட்டி சத்தியசீலன்**

கணேஸ்வரம் அளவெட்டியை பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சத்தியசீலன் நேற்றுமுன்தினம் (19.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி நாகம்மா தம்பதிகளின் மகனும், றோமலாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ரஞ்சிதமலரின் மருமகனும், டனுஷன், கிருஷன் ஆகியோரின் தந்தையும், பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தேஸ்வரி, குகனேஸ்வரன், இராஜேஸ்வரி, ரவிமலர், காலஞ்சென்ற உதயசீலன் மற்றும் கிருபாகரன், ரவீந்திரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.05.2023) செவ்வாய்க்கிழமை பிரித்தானியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயனின் சிரேஷ்ட உதவி ஆசிரியரும், நூலகரும், எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளருமான சரவணமுத்து தங்கராஜாவின் பூதவுடல், நேற்று தீயுடன் சங்கமமானது. (ம)

## தாயகத்தில்...

யாழ்ப்பாணத்தில் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது. 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உடனடியாகத் திரும்பப் பெறப்படவேண்டும்', 'மக்களுக்கு உள்ள ஜனநாயக உரிமைகளை பறிக்காதே' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில், வவுனியா பத்தினியார் மகிழங்குளம் முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. 'சிறுபான்மை மக்களை புதுப்புது சட்டங்கள் மூலமாக ஒடுக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. அதிலொன்றுதான் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மேலும் ஆபத்தான அம்சங்களுடன் உருவாக்கியதன் பின்னணி என்ன?' என்று வவுனியா ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

மன்னார் நகர சுற்றுவட்ப் பகுதியிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் இந்த ஆர்ப்பாட்டம் பரவலாக முன்னெடுக்கப்பட்டது.

(அ-ம.20.26.56.125.18)

## 26,27,28ஆம்...

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போதே நாணய நிதியத்தின் உதவிகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் விவாதிப்பதற்கு திகதிகள் நிர்ணயிக்கப்பட்டது. (அ-ம)

## யாழ்ப்பாணத்தில்...

புத்தூரைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியதாக அடையாளம் காணப்பட்டவர்களில் 5 பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு வந்தது. அவர்களில் ஒருவரின் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவரே நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். ஏனையோருக்கு தொடர்ந்தும் ஒட்சிசன் வழங்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவின் திரிபுகள் காரணமாக கடந்த காலங்களில் இவ்வாறான சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே தற்போதும் உயிரிழப்பு பதிவாகியுள்ளது. இதேவேளை - கொரோனாத் தொற்றுக்குரிய சோதனைகளை மேற்கொள்ளவேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ.5)

## அக்குபஞ்சர்...

இருக்கவேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அண்மையில் வெளிப்படையாகவே எச்சரித்திருந்தது. இதையடுத்து, அரச மருத்துவ அதிகாரிகளுக்கு எதிராகவும் ஆங்கில மருத்துவத்துக்கு எதிராகவும் அந்த அக்குபஞ்சர் மருத்துவர் கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் அவர்களின் மருத்துவம் தொடர்பிலும் முகநூலில் எதிரான தகவல்களை வெளியிட்டார். இதையடுத்து இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டது. முறைப்பாடுகளுக்கு அமைய அந்த அக்குபஞ்சர் மருத்துவரை நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தினார்கள். இதையடுத்தே தனது கருத்துக்களுக்காக அவர் மன்னிப்புக்கோரியுள்ளார். அவரைப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது. (அ-ம)

## ஜனாதிபதியின்...

யாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கும் தேர்தல் சட்டத்துக்கும் முரணான வகையில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால், சர்வதேச சமூகம் இதுதொடர்பாகப் பெரிதளவில் குரல்கொடுப்பதை காணக்கூடியதாக இல்லை. எமது நாட்டுப் பிரச்சினைகளை நாட்டு மக்களே கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால்தான் சிவில் அமைப்புக்களை ஒன்றிணைத்துக்கொண்டு, மக்களை அடக்கும் சட்டவரைவுகளை திரும்பப் பெறுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கிறோம்.

அத்துடன் இலங்கையில் தேர்தல் என்பது நகைச்சுவையான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நான்கு தடவைகள் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த நான்கு சந்தர்ப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியாத நிலைக்கு ஆணைக்குழு தள்ளப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கிறது. அரசமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால், தற்போது தேர்தல் இடம்பெறுவது தாமதித்திருக்கிறது. நிறைவேற்று அதிகாரிக்கு (ஜனாதிபதிக்கு) தேவையான முறையிலேயே நாட்டில் தேர்தல் இடம்பெற வேண்டும் என்ற செய்தியே தற்போது எமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதா?, நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதா? என நிறைவேற்று அதிகாரியே தீர்மானித்து அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அத்துடன் நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஆனால், இந்த பொருளாதார நெருக்கடி நாங்கள் ஏற்படுத்தியது அல்ல. ஆட்சியாளர்களே நாட்டில் உரப்பிரச்சினையை ஏற்படுத்தினார்கள், எரிபொருள், எரிவாயு பிரச்சினையை ஏற்படுத்தினார்கள். தற்போது அதற்கு தீர்வைத் தேடுகின்றனர். அரசாங்கத்தின் இவ்வாறான தீர்மானங்களுக்கு எதிராக மக்கள் வீதிக்கிறங்கும் போது அதனைத் தடுப்பதற்கே பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவுகள் போன்ற சட்டங்களைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது - என்றார். (அ-ம)

## அத்தியாவசியச்...

கல்வித்துறையை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடைத்தாள் திருத்தும் பணிக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு எதிராக அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்துங்கள். விடைத்தாள் மதிப்பீட்டுக்கு செல்ல மறுக்கும் ஆசிரியர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யுங்கள் என்றெல்லாம் பலரும் சொல்கின்றனர். ஜனாதிபதிக்குத் தொழிற்சங்க சட்டங்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர் எப்படி இதனை நிறைவேற்றுவார்? ஜனாதிபதி ஆசிரியர்களின் கோரிக்கையை சவாலுக்குட்படுத்தினால் நாங்களும் கூச்சமின்றி அவருக்கு பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளோம். விடைத்தாள் மதிப்பீட்டுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு தினமும் 3 ஆயிரம் ரூபா வழங்குவது என்ற தீர்மானம் திறைசேரியில் இரண்டு மாதங்களாக கிடந்து இழுபடுகிறது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க எவருமில்லை. ஆனால், சிலர் எங்களைக் குற்றவாளிகளாகச் சித்திரித்து எம்மீது பழிபோடுகின்றனர் - என்றார்.

இதற்கு ஜனாதிபதி ரணில் பதிலடி கொடுத்துள்ளார். தொழிற்சங்க சட்டங்களை வைத்துக்கொண்டு மாணவர்களைப் பகடைக்காயாக மாற்றிவைக்க ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-ம)

## ஜனாதிபதியின் முடிவுக்கு...

அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் உள்ளிட்ட கல்விச்சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்படவேண்டுமென கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளைப் புறக்கணிக்கும் விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதி கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யும் தீர்மானத்தை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் கட்சித்தலைவர்களும் அதே கோரிக்கையை முன்வைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மாணவர்களை பணயக்கைதிகளாக வைத்துள்ளமையை ஏற்கமுடியாது - என்றார்.

(அ-ம)

## மனித உரிமை...

இலங்கைப் பெற்றோர் சங்கத்தின் தலைவர் இந்திக ரணசிங்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

குரங்குகளை சீனாவுக்கு அனுப்பும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போர்க்கொடி உயர்த்தும் சிவில் அமைப்பினர் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகுவது தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை. இதனை மனித உரிமை மீறல் செயற்பாடாகவும் அவர்கள் கருதாமல் இருப்பது கவலைக்குரியது.

வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பேராசிரியர்கள் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகியுள்ளார்கள். அரசாங்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ளும் பிரச்சினைகளுக்கு இவர்கள் மாணவர்களைப் பகடைக்காயாக்குவது எந்த விதத்தில் நியாயமாகும்? கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்தினால் சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை நடத்துவதில் ஏற்கனவே ஒருவருட காலம் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் தொழிற்சங்கப் போராட்டத்தால் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமானால் பரீட்சைகள் தொடர்ந்து தாமதமாகும். பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளைத் துரிதப்படுத்தவேண்டும் என்பதில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடவேண்டும் என்பதற்காகவே ஆணைக்குழுவை நாடியுள்ளோம். தொழிற்சங்கப் போராட்டத்தால் எமது பிள்ளைகளின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. உரிய காலத்துக்குள் கல்விச் செயற்பாடுகளை அவர்களால் முழுமைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை விரைவாக நிறைவு செய்து, பரீட்சைப் பெறுபேற்றை விரைவாக வெளியிடுமாறு உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். பத்து நாள்களுக்குள் தீர்வு கிடைக்காவிடின் ஒட்டுமொத்த பெற்றோரையும் வீதிக்கு இறக்கி போராட்டத்தில் ஈடுபடுவோம். எமது பிள்ளைகளின் எதிர்காலம் எமக்கு முக்கியமானது. பேராசிரியர்கள் அவர்களின் பிரச்சினையை அரசாங்கத்துடன் பேசி தீர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார்.

(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை செல்கிறார் ராகுல்காந்தி!

## மேன்முறையீடு தள்ளுபடி



**புதுடில்லி, ஏப். 21**

**அவதூறு வழக்கில் ராகுல்காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அந்தத் தீர்ப்புக்கு எதிராகத் தொடரப்பட்ட மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால், ராகுல் காந்திக்கு சிறைத்தண்டனை உறுதியாகவுள்ளது என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, 'மோடி' என்ற பெயர் கொண்டவர்கள் திருடர்கள் என்று ராகுல்காந்தி விமர்சித்தார். அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நீரவ் மோடி போன்றோரை சாடும் வகையில் அவ்வாறு தெரிவித்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால், 'மோடி' என்பது இந்தியாவில் ஒரு 'குடும்பப்பெயராக' அறியப்படுகின்றது. இதனால், மோடி என்ற பெயருடைய பிறிதொருவர் ராகுல்காந்தியின் கருத்துக்கு எதிராக சூரத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் ராகுல்காந்தி குற்றவாளி என்று குறிப்பிட்டு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. இரண்டு ஆண்டுகளும் அதற்கு அதிகமாகவும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கமுடியாது என்பதால், அவரின் 'எம்.பி.' பதவியை பறித்து ராகுல்காந்தியை தகுதிநீக்கம் செய்து அறிவித்தது மக்களவைச் செயலகம். இந்தத் தீர்ப்புக்கு எதிராக ராகுல் காந்தி மேன்முறையீடு செய்திருந்த நிலையில், அவரின் மேன்முறையீடு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால், ராகுல்காந்தி சிறைக்குச் செல்வது உறுதியாகியுள்ளது என்று இந்திய சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். (அ-ம)

# மஹிந்த -கோபால் பாக்லே நேற்றுச் சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, ஏப். 21

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இருவரும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பதில் இந்தியா காண்பிக்கும் ஆதரவு தொடர்பிலும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவு தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதி மற்றும் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட ருகுணு பல்கலைக்கழக கேட்போர் கூடம் மற்றும் யாழ். கலாசார நிலையம் தொடர்பாகவும் மஹிந்த ராஜபக்ச, கோபால் பாக்லேயிடம் கேட்டறிந்தார் என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ.ம)

# அரை மணித்தியாலத்துக்கு ஒருமுறை 250 மி.லீற்றர் நீர் அருந்தவேண்டும்!

கொழும்பு, ஏப். 21

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பத்துடனான காலநிலையால் அரை மணித்தியாலத்துக்கு ஒருமுறை 250 மில்லிலீற்றர் நீர் அருந்தவேண்டும் என சுகாதாரத்துறை பொதுமக்களை கோரியுள்ளது.

இதன்மூலம் நீர்ச்சத்து குறைபாடு உள்ளிட்ட நோய்களைத் தடுக்க முடியும் என சிறப்பு மருத்துவர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்துள்ளார்.

மதிய நேரங்களில் தாகம் எடுப்பதற்கு முன்னதாக நீரை அருந்த வேண்டும். அத்துடன் அதிகளவான நீரைப் பருகவேண்டும். இது தவிர, நீர்ச்சத்து குறைப்பாடு ஏற்படுமாயின் அதனை இலகுவாக இனங்காணமுடியும். வெளியேறும் சிறுநீரின் நிறம் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அதேநேரம், பொதுவெளியில் பணிபுரிபவர்கள் தலைக்கவசம் போன்ற பாதுகாப்பு அங்கிகளை அணிவது சிறந்த விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## வாட்டும் வெயில் இளநீருக்கு மவுசு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக அவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஒரு செவ்விளநீர் 200 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

அதேவேளை தெற்கேயிருந்து யாழ்ப்பாணத்துக்கு செவ்விளநீர் வந்து சேராமையால் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் படுகிறது. (ச-17)


**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் சலூன் ஒன்றுக்கு அனுபவமிக்க பணியாளர்கள் தேவை.

**076 280 6356**

**வீடு வாடகைக்குத் தேவை**

கொக்குவில் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 394 2686**

**காணி விற்பனைக்கு**

தாவடி 192ம் இலக்க கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் 100m தூரத்தில் இரண்டு, இரண்டு பரப்புகளாக பிரிக்கப்பட்ட இரண்டு காணித்துண்டுகள் உள்ளது. கொள்முதல் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரில் இருந்து 1km மற்றும் K.K.S வீதியிலிருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது.

**077 220 8432, 077 390 2994**

**வீடு / அறைகள் வாடகைக்குண்டு**

சுதுமலையில் யாழ். பல்கலைக்கழகம், நகர்ப்புற பாடசாலைகளுக்கு அண்மையில் 3 அறை வீடு, பல்கலைக்கழக மாணவர்கள், சிறிய குடும்பத்துக்கு May 1ஆம் திகதியிலிருந்து வாடகைக்குண்டு.

**ஆனந்தன் - 074 000 9644**

**கோயில் உதவியாளர் தேவை**

காரைநகரில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றிற்கு ஆலயத்தை பராமரிப்பதற்கும் இதர கோயில் வேலைகளை செய்வதற்கும் பராமரிப்பாளர் ஒருவர் தேவை.

**077 482 2550 , 077 154 4127**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம்**

**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- **076 733 6047, 076 333 6079 076 733 6093**

**காணி விற்பனைக்கு உண்டு**

- யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை ரூபா நான்கு லட்சம் (400,000/=)

**தொடர்பு:**

**077 076 0389**

**076 9119 371**

**076 7390 413**




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.